440

உ

சிவமயம்.

ஏரல் ஸ்ரீமத்

# அருணாசல சுவாமிகள்

# சந்தக் கும்மி.

இஃது,

மகா-ா-ா-ஸ்ரீ

ரொ. சி. காளி நாடாரவர்கள்

கேட்டுக்கொண்டபடி,

விருதுபட்டிவாசியும்,

ஊத்துக்குடி பாக்குக்கமிஷன்

ஏஜண்டுமாகிய

மகா-ா-ா-ஸ்ரீ

மூ. பெ. கு. சுப்பைய நாடார்

அவர்கள் இயற்றியது.

ஷை யாரால் விருதுபட்டி

சச்சிதானந்த அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன்விலை] [அணா-2.

1911.

வி. சுப்பிரமணியம்

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட

செப் மாதம் 1983 வருடம்

செப்பனிட்டு முடித்த

ஜூன் மாதம் 1984 வருடம்

ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.

உ

சிவமயம்.

OFFICE ... 18 FEB 1911 ... MADRAS.

—(:)—

ஏரல் ஸ்ரீமத்

அருணாசல சுவாமிகள்

# சந்தக் கும்மி.

இஃது,

மகா-௱-௱-ஸ்ரீ

கொ. சி. காளை நாடாரவர்கள்

கேட்டுக்கொண்டபடி,

விருதுபட்டிவாசியும்,

தூத்துக்குடி பாக்குக்கமிஷன்

ஏஜண்டுமாகிய

மகா-௱-௱-ஸ்ரீ

மு. பெ. கு. சுப்பைய நாடார்

அவர்கள் இயற்றியது.

விருதுபட்டி

சச்சிதானந்த அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன்விலை] —— [அணா-2.

1911.

# சாத்துக் கவிகள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 18 FEB 1911 MADRAS.

சிதம்பரம்பட்டி,

மகா-ள-ள-ஸ்ரீ வித்வான்,

## சிதம்பரம்பிள்ளை யவர்கள்

இயற்றியது.

தக்கவரும் படித்தவரும் புகழ்கொழும்புச்
செழும்பாக்குத் தரகால் செம்பொன்
மிக்கவரும் படியுடையா னறிவுடையான்
றிருவுடையான் மின்னார் சிந்தை
யைக்கவரும் படிதிரண்ட புயபாரச்
சுப்பையவே ளார்க்கு மின்ப
மொக்கவரும் படியேரல் கும்மிபசுந்
தமிழாற்செய் துதவி னானே.

---

விருதுபட்டி, வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ

## அ. கந்தசாமிக் கவிராயரவர்கள்

இயற்றியது.

பருமந்திகள் பலவின்கனி பருகும்பொழில் விருதூர்
திருமந்திர நகரந்தனில் வணிகம்புரி திரவான்
மருமந்திரு மகள்கொண்டுள மகிழ்சுப்பைய வழுதி
தருமந்திக ழோரற்கொரு சந்தக்கும்மி தந்தான்.

உ

சிவமயம்.

ஏரல் ஸ்ரீமத் அருணாசலசுவாமிகள்

# சந்தக்கும்மி.

## காப்பு-வெண்பா.

மாமகள்சே ரேரலிலே மன்னுமரு ணாசலசு
வாமிகள் மேற்கும்மி வழுத்தவே-சேமமாம்
தொந்திவயிற் றைந்துகரத் துங்கமதக் கம்பவளத்
தந்திமுகத் தெந்தை திருத்தான்.

## கலித்துறை.

ஆய்கின்ற கல்வியு ஞானமு முள்ளதன் னன்பருக்குச்
சாய்கின்ற மாமலை போல்வரும்நோய்கள் தனையருணன்
காய்கின்ற சீதப் பனிபோல்விலக்கக் கருணையென்றும்
ஈய்கின்ற தெய்வமொன் றுண்டே திருவுரை யேறலிலே.

## சந்தக்கும்மி.

தான தனந்தன தான தனந்தன தான தனந்தனனா
தன தன தான தனந்தனனா
தன தன தான தனந்தனனா
தான தனந்தன தான தனந்தன தான தனந்தனனா.

செந்திரு வாழ்திரு மந்திரமாநகர் வந்திடு மாபயிலே
அரங் கொண்டு திட்டிய கூரயிலே
சிகர் விழித் தேன்மொழி பேகுயிலே
இந்தமணி தரி லுந்தனைப் போன்றவ ரில்லையிப் பூமியிலே 1

பேதையேமாடவர்காமுறுமின்பப் பெருக்குள்ள வாருதியே
எவ்வனப் பெண்கொடி யேரதியே
மதன் கலை பேசிடும் பாரதியே
மாதரசே திரு வேயந்த விண்ணுல வாதவெண் மாமதியே 2

ஆணிப்பொன்னே பச்சை மாணிக்கமே நல்ல வாரணங்கே கூடி
இருவரு மாசையுடன் தோடி
கலந்துய ராசகவி பாடி
காணிக்கை கொண்டந்த எரல்நகர்க்குக் கண்காக்ஷி பெறவாடி 3

அங்குநடக்கு மதிசயந்தன்னைநா னன்புடனின்னதென்று
சொல்லவா அப்படிக்கேன் முன்னின்று
ஒருவர் அடைந்தசமாதி யொன்று
இங்கிதமாயவர்கீர்த்தியைக்கொஞ்ச மியம்பவாமெத்தனன்று 4

மற்புயவீரன் புதுக்குடிராம சுவாமிதன் பாலனடி
கவி சொல்லு வார்க்கனு கூலனடி
அவர்கவி மாற்றிடுஞ் சீலனடி
விற்கணைதாவு மதப்பயல்கண்டு வெருண்டிடு காலனடி 5

யண்டுபுதுக்குடி யாகிமுன்னோரால் பதிந்தபழங் குடியாய்
அதிகாரப் பாண்டியர் தன்குடியாய்
நிறைந்திடும் பாக்கியவான் குடியாய்
கண்டவர்யாரும்புகழ்ந்திட வாழ்கின்றார்காரிகையேகெடியாய் 6

வாழ்ந்திடுமக்குலஞ்செய்தவமோயேரல் மாநகர்செய்தவமோ
அலதிந்த மானிலஞ் செய்தவமோ
பலமனு மாக்களே செய்தவமோ
தாழ்ந்துவருந்தும் பிணியோரைரக்ஷிக்கத் தருமஞ்செய்தவமோ

குற்றமகற்றிய பாண்டியர்தங்கள் குலத்திலுதித்தவராய்
அருநகுணங் கொண்ட தவத்தினராய்
அரும்புகழ் கொண்டதிரத்தினராய்
நற்றவர்போற்றுமருணசலமென்று நாமமபடைத்தனராய் 8

முன்னம்பலபலவேளைநல்லோர்கள் முறையிட்டுக்காகவந்து
அவதார முற்றுத்துயர் கவர்ந்து
இருந்த முளுமுதலேரல்வந்து
அன்னமேதேனே யுகித்தாரடியின்பம் யார்க்குந்தரமகிழ்ந்து 9

செல்வர் மணைத்திருச் செல்வராய் வாழ்ந்தாலுஞ் செல்வச்
[செருககு முண்டா
தனக்கெனுந் தேட்டமெதிலுமுண்டா
பிணிகளைத் தீர்க்கச் சடைவுமுண்டா
வல்லவர்தெய்வீகமுள்ளவரொன்றுமே வாழ்த்தாதபேருமுண்டா

ஏரற்பதிபுகழ் சேர்மனடிபணி யேழுக்குந் தாயனடி
அன்பர் எவர்க்குமே நேயனடி
உண்மை இருந்தசெவ் வாயனடி
பேரறிவாள னடிமிடியோர்க்குப் பெருத்த சகாயனடி 11

பூசுரருங்கவி ராசர்களுந்துதி புங்கவர் நேசனடி
இறையவர் பொன்னடித் தாசனடி
அழகிய பொற்பிர காசனடி
ஈசுரபூசைசெய் வார்குடிவாழுய ரேரலில் வாசனடி 12

தக்கவரன்பொடு கைக்கொளுமிந்து மதத்தபி மானியடி
அறிவுள்ள தத்துவ ஞானியடி
அத்துவி தப்பிர தானியடி
மிக்கநற்பக்குவி கிச்சையார்த்தத்தினை விள்ளவதானியடி 13

நாட்டுக்குள் ளாரறி வாரிவர் தன்மையை நல்ல சுபாகியடி
பிரமத்தை நாடிடும் யோகியடி
நெறிதவ ராதவிவேகியடி
கோட்டுக்கிடைக்கும்பணச்செருக்கோடொனுங் குஞ்சரப்பாகியடி

பூதலந்தன்னிற் பிறந்தமனிதனைப் போல்வந்த தேவரடி
நமக்குச்சற் புத்திர ரீவரடி
இவரொத்த புண்ணியர் யாவரடி
ஆதலினாலிவர் பாதந்தினந்துதி யாதவர் பாவரடி 15

வைத்துப்பிழைக்கவருட்செல்வங்கொண்டுவருகின்றதோணியடி
புகழெனும் வான்பயிர்க்காணியடி
அமிர்த வளஞ்செறி கேணியடி
புத்தமுதத்தைநிகர்த்தபெருங்கவிப்பொன்னுரையாணியடி 16

முப்பதினுள்ளேபிரபஞ்சவாசைகள் மூன்றையுமற்றவராம்
கலைகளை முற்றிலுங்கற்றவராம்
பிரவா முத்தியைப்பெற்றவராம்
அற்புதஞ்செய்யவென் றிப்புவிவந்தெமை யாண்டிடு நற்றவராம்

ஈசன்றிருக்கண்ணில்வெந்தமதனிங்கே யெய்தினனோவுருவம்
எனும்படி யேரற்றிருவுருவும்
அமைந்தே யிலங்குதனிப்பருவம்
பாசமுள்ளோர்களை விட்டுச்சமாதி படிந்தாரருவுருவம் 18

சாதிபேதத்தையு மாதர்போகத்தையுந் தள்ளினபேரிவரே
அவரே சமாதிக்குரியவரே
எனுமனா தன்னையறிந்திவரே
போதித்தனுபவங்காட்டிடவந்தநற்புண்ணியமெய்த்தவரே 19

உத்தமமான தலத்துவிசேடத்தை யோசித்திடும்போது
கடல்வளைழந் துற்றபுவிமீது
இவனைப்போல் யோகமிகுஞ்சாது
சித்துகளன்றி விளங்குவதென்னடி செப்புவா யிப்போது 20

தென்மொழியே மயிலேகுயிலேபந்த சேர்மன்சமாதியிலே
விளங்கிடுஞ் சித்தைப்போற் பூமியிலே
எவிடத்துஞ் சிக்குமோபார்க்கையிலே
மாகேயதிசயங்கேட்கும்போதொன்றையும்வையாதேசிந்தையிலே

ஓயாமற்சொல்லுகிறேனென்றுநீசற்று முள்ளஞ்சலியாதே
வியாகுல முற்று மெலியாதே
சலித்திட லொன்றும் பலியாதே
வாயாற் சொல்லவாரினுங் கேட்பவர்க்கே புண்யம் வாய்க்
[கும் நலியாதே 22

நந்நயச்சொற்களைக்கேட்பதிற்கொஞ்சமும் நட்டணைசெய்யாதே
வேறொன்றில ஞாபகம் வையாதே
எதுவேனும் நான்சொன்னால் பொய்யாதே
கன்னல்மொழிமட மாதேயவர்புகழ் காதுக்குங் கையாதே 23

கண்முதலாய வவபவத்திற்குறை கண்டே யிருந்தாலும்
கொடுஞ்சுரக் காந்தலிருந்தாலும்
சொலும்பல சுவாசமிருந்தாலும்
உண்ணும்பதார்த்தங்கள்ஜீரணமாகா தொடங்கியிருந்தாலும் 24

மண்டைபடிபிர மேகம்வயிற்று வலிகளிருந்தாலும்
நெடுநாள் வாதமிருந்தாலும்
பித்தமொடு வாந்தியிருந்தாலும்
கண்டவரஞ்சிடுஞ் சன்னியிழுப்புக் கடுப்புற்றிருந்தாலும் 25

குட்டங்கிரந்தி பவுந்திரமூலங் கொதிப்புற் றிருந்தாலும்
புறப்பாடு கோடியிருந்தாலும்
பெரும்பாடு கூடியிருந்தாலும்
மட்டிடக்கூடா வியாதிகளிலெது வாகவிருந்தாலும் 26

பத்தியதாகச் சமாதியைச்சுற்றிப் பணிந்திடவே தீரும்
தவிரவும் பாங்குடனேகோரும்
பிரபலப் பாக்கியங்கள்சேரும
சித்தியைக்கேட்டு மகிழ்வுடன் பற்பல சீமையிலுள்ளாரும் 27

மாறுதசெல்வம்படைத்திடவேவரம்வாங்கவேவேண்டுமென்றும்
மக்கள்வரம் வாங்கவேவேண்டுமென்றும்
தீர்க்காயுள் வாங்கவேவேண்டுமென்றும்
தீராப்பிணியால் வருந்திய வெந்துயர் தீரவேவேண்டுமென்றும

கூன்குருடூமை செவிடதுநீங்கிக் குணம்பெற வேண்டுமென்றும்
பயித்தியங் கொண்டதைநீக்கவென்றும்
கால்முடங் கொண்டதைத்தீர்க்கவென்றும்[ றும்
மீன்படுகண்ணி யரைத்தொடர்பேயை விரட்டவேவேணுமென்

மாரனைப்போலழ குள்ளவர்நல்ல மணம்பெற வேண்டுமென்றும்
பிணியினி வாராமற்காக்கவென்றும்
விஷக்கடி மாற்றவேவேண்டுமென்றும்
சேர்மன்றிருச்சித்தைக் கண்ணாலேபார்த்துத்தெரிசிக்கவே
ண்டுமென்றும் 30

மக்களுடன்மரு மக்களுமைந்தர்தம் மக்களையுங்கூட்டி
மகளுடை மக்களையுங்கூட்டி
உறவினர் மக்களையுங்கூட்டி
தக்கவரம்பெற லாமென்றயல்மக்கள் தங்களையுங்கூட்டி 31

மாடுதிரத்துடன் பூட்டித்தினம்வரும் வண்டியொருகோடி
அதில்வரு மாந்தரிருகோடி
நடந்து வருவார் பலகோடி
கூடுமமரவசி தோறும்வருஞ்சனங் கோடிக்கி மேற்கோடி 32

வந்ததிருக்கூட்ட மத்தனையுந்தாம்பிர வர்ணியில்நீராடி
அவனை வணங்கிவலங்கூடி
வரமது வாங்கிப்புகழ்பாடி
சொந்தமனைதனக் கேகுவார்கோடி சுகத்துடனோடி 33

வீரமிடும்வச்ர வேலேகீர்த்தகண் மேனகைபோற்கானும்
பெண்கள்வாழ் மேடையதுபூணும்
கொடிமரம் விண்ணளவுந்தோணும்
ஏரவிலேயவர் பேரருள்பெற்றிட யேகிவரவேணும் 34

ஆதலினுலுங் குழலுக்குப் பூமல ாரமது சூட்டி
கண்களுக் கஞ்சனமைதீட்டி
நவமணி யாபாணம்பூட்டி
வாதுசெய்யாதிந்தப்போதினிற்சீக்கிரம் வாடியென்சீமாட்டி 35

தாவுங்குதிரை யிரண்டதுபூட்டிய சாரட்டின்மீதேறு
போய்வரத் தாமதமேன்கூறு
சிறந்திடுஞ் சண்பகப்பூநாறு
வாவிதிகழ்திரு மந்த்ரநகரின் வளங்களைக் கண்பாரு 36

இங்கிதமாகக் குடங்களிடுப்பினி லேந்திவரும்போது
சந்தித்தால் எள்ளளவுஞ்சாது
ரியமொழி யென்பதும்பேசாது
மங்கையர்வந்து சலங்களெடுத்திடும் வட்டக்கிணறீது 37

பட்டையதாரி புரையருவின்ஆசுப் பத்திரிபார்குயிலே
இதைவிட்டப் பாலிந்தபாதையிலே
துரிதமாய் பற்பலசீமையிலே
தட்டிவிடுகின்ற சங்கதிவந்திடுந் தந்தியாபீஸ்மயிலே 38

வந்துகண்டோமடி இங்கிலீசுத்துரை மன்னவரின்கோடு
உயர்ந்திடும் மாயநாட்டார்வீடு
நல்லபெரு மாள்பிள்ளையின்வீடு
சந்த்ரவதனன் வயிரவநாதன்செய் சத்திரங்கண்ணுடு 39

செல்வவினயகர் கோவிலேக்கண்டு தெரிசித்திடுவோமே
இதற்குமுன் செய்தகன்மம்போமே
வடியிட்ட தேன்மொழியேநாமே
சல்தியிலேபுதுக்கோட்டையருகுள்ளசத்திரங்கண்டோமே 40

தாரணியுங்குழல் மாதரசேயிந்தச் சாரட்டைவிட்டிரங்கி
இங்குள்ள சாமிகளைவணங்கி
கொணர்ந்திடுஞ் சாதமகுண்டுதங்கி
ஏரலெனும்பதிக்கேகலாம்வாடியென் னிஷ்டப்படிக்கிணங்கி 41

சாதமதுண்டுதாம்பூலமிட்டோமினித் தாமதஞ்செய்யாதே
நடந்திடத் தையலேயெய்யாதே
மனமதிற் சஞ்சலம்வையாதே
மாதரசேமெல்ல மெல்லநடந்துநீ வாடிமணல்மீதே 42

பாதையில்நஞ்சுடைசெந்துக்குநீயும்பயப்படவேண்டாமே
திருடர் பயமுந்தான்வேண்டாமே
எதற்கும் பயப்படவேண்டாமே
கோதையேசேர்மன்றனைநினையொன்றுக்குங் கூசவும்வேண்டாமே

சந்தேசங்கொண்டிடில்நேரில்வருவாரைத்தானேநீகேட்டிடுவாய்
அதற்குப்பின் தானேவாய்பூட்டிடுவாய்
மணங்கொண்ட சங்கையைவிட்டிடுவாய்
எந்தேகமம்மம்மாவென்னபரவச மென்றன்னைக்கேட்டிடுவாய்

வந்துகூட்டாம்புளி சேர்ந்திடநேர மதியமதாகவில்லை
இதுகோட மாபுரத்திற்குமெல்லை
சிறிதும் வழிப்பயந்தானுமில்லை
இந்தாதெரிந்திடும்பேக்குளத்தின்கரையே வினைற்றாரமில்லை 45

தையலேநல்ல வளம்பெருகுஞ்சிவந் தையாபுரம்நோக்கு
பெருகிடுஞ் சான்றோரின்செல்வாக்கு
இதிலேயுன் ஞகக்களைநீக்கு
வெய்யிற்றணிமட்டுஞ் சோலையில்நேரத்தை வேடிக்கையிற்
போக்கு 46

உன்னிதமாவொடுதென்னைபன்னீர்பலா புன்னைபுளிபாக்கு
மரமடுத் தோங்கிவளர்தேக்கு
அதிற்குயி லோசைவெருசோக்கு
இன்னுந்தொடர்ந்துநீ வந்துதான்பாரடி யென்னதான்
[செல்வாக்கு 47

மாலைப்பொழுதினின் றேன்விடுமிந்தச்செவ் வானமழகைப்
பாராய்
இளந்தென்றல் வந்தேயொரு சீராய்
மோத வயலுமொருவாறாய்
நீலநிறக்கடல் தன்னைநிகர்த்திடும் நேர்த்தியைநீபாராய் 48

எட்டி நடந்துவா கிட்ட நெருங்கியின் னொட்டின்வெள்ளம்பாரு
உலகினி    லெங்கும்புகழாரு
நதிபாய்ந்    திருக்கும்வயற்சீரு
மட்டிடங்கூடுமோ செந்நெல்கன்னலென மதித்துநீகூறு 49

பூக்கமளாறு முகமங்கலத்தின் புதுமைகளைப்பாரு
இதிலுள்ளோர்    புண்ணியத்தின்கூறு
குளத்தின்    பொருத்தம்வெகுசீரு
சோக்குடனிவ்வழியேநடப்போமோற் றேனறுதிதோகேரு 50

தேசம்புகுந்தபொன் மாமயிலேசெழுந் தேன்மொழியேவாராய்
அறிஞர்சொல்    தெள்ளியநூலாராய்
பவர்வெகு    செல்வமுடன் சீராய்
வாசம்புரிகின்ற பேரல்நகர வளங்களைக் கண்பாராய் 51

மைதிகழ்கண்ணுடை வல்லியர்வந்துநோய் மாமலர்தோட்டமிது
அன்னவகட்கு    வார்க்குநீரோட்டமிது
தவம்புரி    வார்பெருங்கூட்டமிது
அய்யனைப்பூசைசெய் யன்பர்திருவிளை யாடுங்கொண்டாட்டமிது

வேதமுழங்கிட வேள்விபுரிந்திடும் வேதியர்வீதியிது
சிறப்புள்ள    வேந்தர்கள்வீதியிது
வணிகர்    மிகுத்துறைவீதியிது
சூத்திரியாதநல் மேழித்தொழில்புரி சூத்திரர்வீதியிது 53

தேசத்துமன்னர்கள் யாவருமெச்சிடுஞ் சித்திரக்கூடமிது
அழகிய    செம்பொன்னின் மாடமிது
அரசர்    திருகொலுப்பீடமிது
வாசத்துக்கேற்றமேல்மாடியின்பாதைக்கி வைத்தகபாடமிது 54

இங்கிதமாய்ப்பல பாஷையைக்கற்க வியற்றியசாலையிது
தண்டமிழ்    இலக்கணச்சாலையிது
பலவித    யெந்திரச்சாலையிது
நன்மையேகாண்பாய் தொழிற்சாலையிது நாடகச்சாலையிது 55

நாட்டுச்சரக்குமேல்நாட்டுச்சரக்குகீழ்நாட்டுச்சரக்குகளும்
உயர்மலை நாட்டுச்சரக்குகளும்
அலைகடல் நாட்டுச்சரக்குகளும்
தேட்டுடன்விற்குங் கடைகளைப்பாருண்டு தேவைச்சர
க்குகளும் 56

முத்தாரம்மனதிருவாலயமும்மிது மொய்குழலேபணிவாய்
நடையால் ஞேயங்குகளைதணிவாய்
இனிமேல் முகம்மலர்ந்தே துணிவாய்
சித்தமகிழ்ந்தவள்பூதியைவாங்கியுன் சென்னியிலேயணிவாய் 57

இன்றுபொழுதத்த மானந்தரல்நேரா யிருக்கின்றவீதியிலே
அமர்த்தி யிருக்கின்றமாடியிலே
தங்கி யிருந்துவிரைவினிலே
தென்திருவண்ணாமலைக்குவிடிந்தபின் செல்லுவோங்காலையிலே

தென்திருவண்ணாமலையென்றுரைப்பதுந்தேனேயிதுதாண்டி
தலத்திற் சிறந்ததிதுதாண்டி
விளங்குஞ் சிறப்புமிதுதாண்டி
நன்றாகக்காணக் கிடைத்ததுமுன்செய்த நல்லதவந்தாண்டி 59

தார்மன்னர்போற்றிடுஞ் சேர்மன்னராகிய சாமியிவராமே
அடைந்த சமாதியுமீதாமே
திருக்காப்புத் தானுமிதுவாமே
பாரடியுற்றுநீபார்த்திடிலிப்போதேபாவமெல்லாம்போமே 60

நாட்டமுகமானதோர் சைவமதக்குரு சங்கரர்தானாரு
திருஞான சம்பந்தர்தானாரு
சித்தரெனச் சாற்றுதல்தானாரு
நாட்டிலறுபத்து மூவரெனச்செப்பும் நாயனார்தானாரு 61

இன்னுமுலகினில்மும்மூர்த்தியென்றே வியப்புநல்தானாரு
சத்தரிசி யென்பதுந்தானாரு
இடமுள்ள யேசுவுந்தானாரு
நன்னயமான முகம்மதுடன்நபி நாயகர்தானாரு 62

வாரிதிசூழ்ந்திடு மண்டபகிரண்ட மற்றதுந்தாஞரு
சராசர வர்க்கமுந்தாஞரு
அனைத்தும் வருத்ததுந்தாஞரு
தேரிடியெல்லா மிடரேயிவர்திராஞ் செப்புதல்தாஞரு 63

இப்பெருமுத்தமர் தன்னைநினைந்திடி லின்பம்பெருகுமடி
நினைத்தவை யெல்லாம்வருந்தமடி
பகையென்ப தெல்லாங்கருகுமடி
தப்பிதமில்லை நினைந்துபாருன் மனந் தானேவுருகுமடி 64

பேணித்தலமெல்லாஞ் சுற்றிமகப்பெறப்பேர்களும்வந்துகண்டு
வணங்கியே பேசிமவுனங்கொண்டு
[illegible]ம்பல பெற்றுமகிழ்ந்துசொண்டு
காணிக்கி நல்லபுதல்வரைப்பெற்றுக் களித்தோரனேகருண்டு 65

வாதத்தினும்மன வாதத்தினும்பிடி வாதத்தின்வந்தகுறை
சாதிமத வாதத்தின்வந்தகுறை
பலதர்க்க வாதத்தின்வந்தகுறை
ஓதத்தின்வந்த குறைபலதீர்ந்ததற் குண்டோசொல் கங்குகரை

தீருமெனச்சொல்லுஞ் சொல்லைமறுத்துத் திறக்காதேபல்லையடி
தவறுரை செப்பிடிற்றொல்லையடி
தெளிந்துபார் தேனேயென்சொல்லையடி
பாரிலிவளைப்போல் நோய்தீர்க்குந்தெய்வம்நான்பார்த்தது
[மில்லையடி. 67

எட்டுத்திசைவருங் கூட்டச்சனத்தொகை யெண்ணக்கண
[க்குமுண்டா
முன்னம் இசைத்ததுதிண்டுமுண்டா
உற்றுப்பா ரின்னுஞ்சந்தேகமுண்டா
மட்டிடக்கூடுமோயிந்தவிசேடம்போல் மானிலந்தன்னிலுண்டா

தாரணியோர்புகழ் தாம்பிரவர்ணிச் சலத்திலேநீராடி
ஒன்றும்பே சாதுவழிகூடி
மலர்த்திட்ட காதலர்தேடி
ஓர்மனதாய்வலஞ் சுத்திச்சேவித்திட வொண்டொடியேவாடி

B4 / 11-57

பத்திதருவார் பதந்தருவார்நல்ல பாக்கியந்தந்திடுவார்
நம்மைக்கண் பார்த்திடவந்திடுவார்
திருப்பதம் பாடவியந்திடுவார்
சித்திதருவார் நமதுகுறைகளைச் சேதித்துங்கந்திடுவார் 70

ஆதிமுழுமுதலையன் சமாதியையன்பாய்ச் சேவித்தோமே
முத்திரையை அளித்தரித்தோமே
சுகம்பெற் றகமுங்களித்தோமே
சோதியைநாளுங் குமிப்பிரபந்தத்திற் சொல்லிப்படிப்போமே

செம்மலர்வாழுந் திருமேனியென் னுடன்சேர்ந்துபடிப்பாயே
கையின்மலர்ச் செண்டுபிடிப்பாயே
அபினயந் தேர்ந்துநடிப்பாயே
கும்மியடித்திடு மாதரைச்சேர்ந்துநீ கூடியடிப்பாயே 72

தங்கம்மா ரெங்கம்மா லிங்கம்மாசுந்தரி சங்கம்மாசாலாச்சி
குப்பம்மா சற்குணமீனாச்சி
சுப்பம்மா தாயம்மாகாமாச்சி
அங்கம்மாசெங்கம்மா முத்தம்மாசக்கம்மா ஆயம்மாதேனாச்சி 73

மாணிக்கவல்லி வசந்தவல்லிசுந்தர வல்லியேவாருங்கடி
நான்சொல்லும் வார்த்தையைத் தேருங்கடி
இந்தமட மாதுடன்சேருங்கடி
பாணிக்குள்வைத்த ரங்கேசற்றுகுமிப்பிரபந்தத்தைப் பாருங்கடி

காட்டிநகைமுகங் காட்டியபிநயங் காட்டியேகால்கூட்டி
வளையிட்ட காந்தளக்கைநீட்டி
அதன்வழி கண்ணிணையைநாட்டி
நாட்டியரம்பைபோற் கும்மியடியுங்கள் நாகரீகங்காட்டி 75

காலொடுகாலுர சாமல்வளையணி கைகளுஞ்சோராமல்
பிறர்களைக் கண்கொண்டும்பாராமல்
சொல்லுஞ்சுதிக் கானமும்மாறாமல்
மேலொடுமேலுர சாமலிடந்தன்னை விட்டடிபோராமல் 76

பூவையரோபையப் பையநடந்து புருவஞ்சுழியாமல்
அணிந்திடும் பொட்டுமழியாமல்
யெவரும் புறத்தேபழியாமல்
காவிற்றிரிமயில் போன்றுநடிப்பீர் விண்காலங்கழியாமல் 77

கச்சிட்டிருக்குந் தனங்குலுங்கவுங்கள் கைவளையுங்குலுங்க
பாடக் காலெலிலியுங்கிலுங்க
மின்னெனக் காதணியுமிலங்க
மெச்சிப்பின்வாங்கி முன்னேங்கியடியுங்கள் மேனிமிக்கத்துலங்க

மார்பினிலேமுத்து மாலைபுரண்டிட மையிடுங்கண்ணாட
பவளத்தின் வாய்முறுவலாட
கருங்குழல் வண்டுபறந்தோட
கார்கண்டமாமயில் போன்றுநடியுங்கள் கண்டவர்கொண்டாட

சற்குருவாமரு ணாசலதேவின் சாமியைப்போற்றுங்கடி
மலரவர் தாள்களிற் சாற்றுங்கடி
பிரணவத் தையுருவேற்றுங்கடி
இசைந்திசகாமலிறப்புப்பிறப்பென்னுந் துன்பத்தைமாற்றுங்கடி

வேலையிலேயலை மோதுதல்போற்பல வேலைசெயும்போதும்
அகனிடை மீந்தசிலபோதும்
சபையைய விற்பன்னரெனமேருதும்
பாலன்புகன்றவிக் கும்மியைமேலோர் பழியாதொருபோதும் 81

மந்திரவேதங்கள் வாழிமறையவர் வாழிகடல்வாழி
புவனங்கள் வாழிபுனல்வாழி
புலவர்கள் வாழிதமிழ்வாழி
சந்ததமும் அருணாசலசாமி சமாதியுமேவாழி 82

இந்தச்சந்தக்கும்மி தன்னைப்படிப்பவர் எல்லவருமவாழி
கேட்பவர் எல்லவருமவாழி
நினைப்பவர் எல்லவருமவாழி
செந்திருவாழ்ந்திடு மேரல்நகருஞ் சிறப்புடனேவாழி 83

மாதமும்மாரி பொழிந்துவிளைந்து மலிந்துமிகவாழி
பதிகசெல் வஞ்செழித்தேவாழி
பனைவரும் மக்கள்பெற்றேவாழி
நீதமுடனுல காளுமரசர் நெடுகலுமேவாழி. 84

சந்தக்கும்மி - முற்றிற்று.

118965
O-185M572,E
N11